நெல்லியாளம் நகராட்சிஅலுவலகம்,
பந்தலூர் – நீலகிரிமாவட்டம்.

## சாதாரண கூட்டம் 29/06/2018 வெள்ளிக்கிழமை

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராட்சியின் ஆணையாளர் மற்றும் தலைவரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள பொளீரோ வாகனம் TN.43.Z.4302 மற்றும் TN.43 Y.0513 ஆகியவற்றிற்கு வருடாந்திர காப்பீடு 28.06.2018 உடன் முடிவடைவதால், காப்பீடு புதுப்பித்தல் செய்யவும் வருடாந்திர காப்பீடு தொகை ரூ12572/- மற்றும் ரூ.13003/- M/s. United India Insurance Co Ltd என்ற நிறுவனத்திற்கு செலுத்த தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.2**

நெல்லியாளம் நகராட்சியில் 2017-2018ம் ஆண்டில் நடைபெற்ற திட்டப்பணிகளை மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.9900/- பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.9900/- மாலை முரசு நாளிதழுக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான தலைவரின் பயன்பாட்டில் உள்ள பொளீரோ வாகனம் TN.43.Y.0513 உதிரி பாகங்கள் பழுதடைந்துள்ளதால், பழுது நீக்கம் செய்யவும், உதிரி பாகங்கள் மாற்றி அமைக்கவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.17500/-க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2018-2019ம் ஆண்டிற்கு (1.7.2018 முதல் 30.6.2018 வரை) பம்பு இயக்கும் பணிக்கு 28.6.2018 அன்று நடைபெற்ற டெண்டரில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.தேய்வேந்திரன் | ரூ.936000/- |
| 2 | திரு.பாபு வர்கீஸ் | ரூ.1036800/- |

**அலுவலக குறிப்பு**

1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.தேய்வேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2) கூடுதல் செலவினம் ரூ.36000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ஆணையார் மற்றும் தனி அலுவலரின் அனுமதிக்கும்.

**பொருள் எண்.5**

2018–2019ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பாண்டியார் கத்திரிதோட்டில் நடைபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.7,00 இலட்சத்திற்கு 28.6.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.மனோகரன் | 0.68 % குறைவு |
| 2 | திரு. தேய்வேந்திரன் | 0.27% அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.மனோகரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

**பொருள் எண்.6**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட ஏலமன்னா ராமசாமி காலனி, ஆமைக்குளம் காலேஜ், பெருங்கரை, தேவகிரி, கைதகொல்லி, செம்மண்வயல் ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் கிணறுகள் மாசுப்பட்டுள்ளதால் அக்கிணறுகளை தூர் வாரி சுத்தம் செய்ய ரூ.31500/-க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.7**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு 120 குடிநீர் திட்டம் மற்றும் 9 செக்டேம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 9 குடிநீர் **Liquid Chlorination Units** நிறுவப்பட்டுள்ளது. 2018-2019ம் ஆண்டுக்கு தேவையான **Liquid Chlorine** வாங்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.9.50/- இலட்சம் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.8**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018-2019 ன் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்கு ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ.1.00 கோடியே 14 லட்சம் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதியாகவும், ரூ.0.90 லட்சம் மத்திய நிதிக்குழு மானிய நிதியாகவும், ரூ.0.66 லட்சம் மாநில நிநிதக்குழு மானிய ஊக்க நிதியாகவும் ரூ.0.30 இலட்சம் நகராட்சி பங்களிப்பு தொகையாகவும் அனுமதித்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.9**

நெல்லியாளம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் குறித்த Water Supply Zonation மற்றும் DMA வரைபடம் A0 அளவில் தயார்செய்து நகராட்சி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் திருப்பூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி வரைபடங்கள் எடுக்க உத்தேச செலவு தொகை ரூ.1.50/– லட்சம் ஆகும். தொகை வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கும், பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.10**

நெல்லியாளம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் TN.43.Z.4514 எண் கொண்ட டம்பர் பிளேசர் வாகனம் மற்றும் TN.43.Z.4515 எண் கொண்ட டிப்பர் லாரி வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கும் பணிக்கு 14/06/2018 ஆம் தேதி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | டைமன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், கூடலூர் | ரூ.13700/– |
| 2 | ஆறுமுகம் டிரேடிங் கம்பெனி, கூடலூர் | ரூ.15700/– |
| 3 | A.K.பேட்டரிஸ், கூடலூர் | ரூ.13260/– |

**அலுவலககுறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விலைப்புள்ளி அளித்துள்ள A.K.பேட்டரிஸ், கூடலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், பட்டியல் தொகை ரூ.13260/– வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் TN.43.Z.4515 எண் கொண்ட டிப்பர் லாரி வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து தகுதி சான்று பெறும் பணிக்கு 07/05/2018 ஆம் தேதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த சதவிகிதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ லட்சுமி ஆட்டோ கேரேஜ், பந்தலூர் | 3.11 % குறைவு |
| 2 | ப்ரண்ஸ் ஆட்டோ கேரேஜ், கூடலூர் | 1.78 % அதிகம் |

**அலுவலககுறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்.

2.பொதுசுகாதார பணியின் அவசரம், அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ லட்சுமி ஆட்டோ கேரேஜ், பந்தலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியது பதிவு செய்யலாம். மேலும் பட்டியல் தொகை ரூ.43600/– வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான தளவாடப் பொருட்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கான பாதுகாப்பு சாதனங்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7.50/– லட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் பகுதியில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் பயன்படுத்திவரும் மூன்று சமையல் எரிவாயு அடுப்புகள் மற்றும் கிரைண்டர் ஒன்று பழுதடைந்துள்ளது. மேற்படி சமையல் எரிவாயு அடுப்பு மற்றும் கிரைண்டர் ஆகியவற்றை பழுதுநீக்கம் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.30000/–த்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.14**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் பகுதியில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 01/04/2018 முதல் 30/06/2018 முடிய மூன்று மாதங்களுக்கு திரு.தாஜ்நிஷா காய்கறிகள் வியாபாரம், பந்தலூர் என்பவர் மூலம் காய்கறிகள் பெறப்பட்டு வந்தது. தற்போது 01/07/2018 முதல் 30/09/2018 முடிய மேலும் மூன்று மாதங்களுக்கு மேற்படி திரு.தாஜ்நிஷா காய்கறிகள் வியாபாரம், பந்தலூர் அவர்கள் மூலம் அம்மா உணவகத்திற்க காய்கறிகள் பெற்றுக்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**தனி அலுவலர்,**
**நெல்லியாளம் நகராட்சி.**